


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






## இந்தோனேசியா மேற்கு ஜாவாவில் பயங்கர நிலநடுக்கம்

# 54 பேர் பலி!

## சியாஞ்சூர் பகுதியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் தாக்கம் 300க்கும் மேற்பட்டோர் காயம்: தொடரும் மீட்பு பணிகள்

ஜகார்த்தா, நவ.22-

இந்தோனேசியாவின் முக்கிய தீவு பகுதியான மேற்கு ஜாவா மாகாணத்தில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இடிபாடுகளில் சிக்கி இதுவரை 54 பேர் உயிரிழந்துள்ளனர். 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.6 ரிக்டர் பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலநடுக்கம் காரணமாக இஸ்லாமிய உண்டு உறைவிட பள்ளி ஒன்றும், மருத்துவமனை ஒன்றும் சேதடைந்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டபோது மிகப்பெரிய அதிர்வை உணர்ந்ததாகவும், இதை அடுத்து கட்டடங்களுக்குள் இருந்தவர்கள் அவசர, அவசரமாக வெளியே வந்ததாகவும் அப்பகுதி மக்கள் அதிர்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

மொத்தம் 27 கோடி மக்கள் வாழும் இந்தோனேசியாவில் அதன் நிலவியல் அமைப்பு காரணமாக அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம்.



இதேபோல், இங்கு எரிமலை வெடிப்பும், சுனாமி பாதிப்பும்கூட நிகழ்கிறது. தலைநகர் ஜகார்த்தாவை ஒட்டிய பகுதிகளில் நிலநடுக்கம் அரிதாகவே ஏற்படும் என்ற போதிலும், இம்முறை ஜகார்த்தாவை ஒட்டிய பகுதியில்தான் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. ஜகார்த்தாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவின் சுமத்ரா பகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் நிகழ்ந்த நிலநடுக்கம் காரணமாக 25 பேர் உயிரிழந்தனர். 460-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோளில் 6.2 ஆக பதிவாகி இருந்தது. இதேபோல், கடந்த ஆண்டு ஜனவரியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததும், 6,500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

சியாஞ்சூர் பகுதியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தேசியபேரிடர்தணிப்பு முகமைத் தலைவர் சுஹரியாண்டோ தெரிவித்துள்ளதாவது: பல கட்டிடங்கள் இடிந்து தரை மட்டமாகின. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து சேதம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. நிலநடுக்கம் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் ஏராளமானோர் இருளில் தவித்து வருகின்றனர்.

நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இருப்பினும் இடிபாடுகளில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமை செயலகத்தில், மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் மாநில அளவிலான இரண்டாவது ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலாளர் இறையன்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மை செயலாளர் அமுதா, அரசுத்துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுகையில் உயிர்ப்பலி வாங்க காத்திருக்கும் காய்கறி மார்க்கெட் நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?: மக்கள் எதிர்பார்ப்பு

புதுக்கோட்டை, நவ.22-

புதுக்கோட்டையில் இதயப்பகுதியான கீழ ராஜவீதியில் பழுதாகி நிற்கும் கட்டிடங்களுக்கு இடையே ஆபத்தான நிலையில் மாலையில் செயல்படும் காய்கறி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. அப்பாவி மக்களின் உயிரைக் காவு வாங்கும் முன் இந்த மார்க்கெட்டை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்பது அனைத்து தரப்பினரின் கோரிக்கையாக உள்ளது.



புதுக்கோட்டை நகரில் நாள்தோறும் மக்கள் பரபரப்பாக இயங்கி வரும் கீழராஜவீதியில் புதுக்கோட்டை கூட்டுறவு நகர வங்கி பழைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த கட்டிடத்தில் செடிகள் வளர்ந்து எப்போது வேண்டுமானாலும் இடியும் நிலையில் உள்ளது. இதன் அருகிலேயே தனியாருக்குச் சொந்தமான பழைய கட்டிடமும் பாழடைந்து காணப்படுகிறது.

இந்த ஆபத்தான இருகட்டிடங்களுக்கு இடையில் தான் மாலை முதல் இரவு வரை செயல்படும் காய்கறி மார்க்கெட் இயங்கி வருகிறது. சுமார் 50 கடைகள் உள்ள நிலையில் கீழராஜவீதி சுற்றுவட்டார மக்கள் இங்கு தான் காய்கறி வாங்க வருகின்றனர். அரசு அலுவலர்கள் மாலையில் இவ்வழியாகச் செல்லும் போது இந்த மார்க்கெட்டில் காய்கறி வாங்கிச் செல்கின்றனர். நாள்தோறும் இந்த காய்கறி மார்க்கெட்டால் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் மக்கள் நெருக்கம் காரணமாக அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. அவ்வப்போது விபத்துக்களில் சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் என்று அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வழியே செல்லும் 108 அவசரகால ஆம்புலன்ஸ்கள் கூட்ட நெரிசலில் சிக்கி சரியான நேரத்திற்கு செல்ல முடியாத அவலமும் நடக்கிறது.

சர்ச்சைக்குரிய இந்த பழைய கட்டிடங்கள் மழைக்காலத்தில் இப்ப விழுமோ, எப்ப விழுமோ என்ற நிலையில் உள்ளது. இங்கு செயல்படும் காய்கறி மார்க்கெட்டுக்கு வரும் பெண்கள் குழந்தைகளுடன் வருகின்றனர். உயிரை கையில் பிடித்துக் கொண்டு வந்து செல்லும் அவல நிலை நீடிக்கிறது.

ஆகவே, புதுக்கோட்டை நகராட்சி நிர்வாகம் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்து இந்த காய்கறி மார்க்கெட்டை அப்புறப்படுத்தி வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். அப்படி இல்லை என்றால், பழுதுபட்டு நிற்கும் நகர கூட்டுறவு வங்கியை இடித்து விட்டு புதிதாக கட்ட நடவடிக்க எடுக்க வேண்டும். ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டு உயிர்ப்பலி ஏற்பட்ட பிறகு நடவடிக்கை எடுப்பதை விட, தற்போதே நகராட்சி நிர்வாகம் விழித்துக் கொண்டு இப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் நாகராஜனை புதுகை வரலாறு சார்பில் தொடர்பு கொண்டு மக்கள் அதிகம் கூட கூடிய இடத்தில் அவர்கள் உயிருக்கு உலை வைக்கும் வகையில் இரு புறங்களிலும் உள்ள கட்டிடங்களின் அபாய நிலை குறித்து கேட்டபோது அவர் தெரிவித்ததாவது;

காய்கறி மார்க்கெட் நடைபெறக்கூடிய இடத்தில் தனியாருக்குச் சொந்தமான மிகவும் பழமை வாய்ந்த இடியும் தருவாயில் உள்ள கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த கட்டிடத்தின் உரிமையாளரே விண்ணப்பம் செய்து அதற்கான அனுமதியையும் பெற்று விட்டார். ஆனால், அவர்கள் இதுவரை இடிக்க முன்வரவில்லை. அருகில் இயங்கி வரும் நகர வங்கி கட்டிடத்தின் தன்மை குறித்து தங்கள் மூலம் தான் அறிய நேர்ந்தது. அதுகுறித்து உடனடியாக கள ஆய்வு மேற்கொண்டு மக்களுக்கு எந்த அசம்பாவிதம் நடைபெறாத வண்ணம் உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும். காய்கறி கடை நடத்தி வருபவர்களில் ஒருவர் மட்டுமே காய்கறி கடையை வேறு இடத்திற்கு மாற்ற முடியாது என்று தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். அவருக்கு உரிய அறிவுரை வழங்கி மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஆதிவாசிகள் முன்னேறுவதை பா.ஜ., விரும்பவில்லை குஜராத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ராகுல் சாடல்!

சூரத், நவ.22-

ஆதிவாசிகள் தான் நமது நாட்டின் முதல் உரிமையாளர்கள். ஆனால், அவர்கள் முன்னேறுவதை பா.ஜ.க., விரும்பவில்லை என்று காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

குஜராத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, ஆம் ஆத்மி தேசிய ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் நேற்று குஜராத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி, நேற்று முதல் முறையாக குஜராத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். சூரத் நகரில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியதாவது:

நான் மேற்கொண்டு வரும் இந்திய ஒற்றுமை யாத்திரையில் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு ஏராளமான மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்று வருகின்றனர். இந்த நாட்டில் இருந்து வெறுப்பை அகற்றும் நோக்கிலேயே இந்த யாத்திரையை நாங்கள்



மேற்கொண்டு வருகிறோம்.

இந்த யாத்திரையின்போது, விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் ஆதிவாசிகளைச் சந்தித்துப் பேசினேன். அப்போது அவர்கள் அனுபவித்துவரும்வலியை நான் உணர்ந்தேன். ஆதிவாசிகள் தான் நமது நாட்டின் முதல் உரிமையாளர்கள்.

ஆனால், பா.ஜ.க., அவர்களை வனவாசி என அழைக்கிறது. அவர்களின் நிலங்களை அவர்களிடம் இருந்து பறித்து 2-3 தொழிலதிபர்களுக்கு பா.ஜ.க., கொடுத்துவிட்டது. ஆதிவாசிகள் மாநகரங்களில் வாழ்வதையோ, அவர்கள் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பெறுவதையோ பா.ஜ.க., விரும்பவில்லை. இவ்வாறு ராகுல் காந்தி காட்டமாக பேசினார்.



புதுக்கோட்டை மாவட்ட காது கேளாதோர் சங்கம் சார்பில் உலக காது கேளாதோர் தின விழா நடைபெற்றது. விழாவில் தொழிலதிபர் எஸ் வி எஸ் ஜெயக்குமார், புதுக்கோட்டை திமுக நகர செயலாளர் செந்தில் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி விழாவை சிறப்பித்தனர். விழாவில் மாவட்ட நிர்வாகிகள் முகமது தாஹிர், சிவகுமார், செல்வராஜ், நடிகர் சாத்தையா, வழக்கறிஞர் சிவா, முத்துடையாம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் வேலுச்சாமி, ஒன்றிய கவுன்சிலர் தீர்த்தப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கேபிள் டிவி சேவையில் பாதிப்பா? உதவி எண்களை அறிவித்தது தமிழக அரசு!

சென்னை, நவ.22-

அரசு கேபிள் டிவி சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் மக்கள் தொடர்பு கொள்ள தொலைபேசி எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் அரசு கேபிள் டிவி ஒளிபரப்பு மூன்று நாட்களாக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. திருவள்ளூர் உள்ளிட்ட பல இடங்களில் அரசு கேபிள் டிவி ஒளிபரப்பு அலுவலகங்களை முற்றுகையிட்டு கேபிள் ஆபரேட்டர் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக செய்தி மக்கள் தொடர்பு துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது: தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவை மென்பொருளை, பராமரித்து வரும் தனியார் நிறுவனத்தால் சட்டவிரோதமாக செயலிழப்பு செய்யப்பட்டதன் காரணமாக கடந்த இரண்டு நாட்களாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கேபிள் டிவி செட்டாப் பாக்ஸ்களின் கட்டுப்பாட்டு மென் பொருளை அத்துமீறி இணைய வழியில் நுழைந்து செயலிழப்பு செய்த நிறுவனத்தின் மீது குற்ற வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தகவல் தொழில்நுட்பத் துறையின் தொழில்நுட்ப குழுவின் உதவியுடன் பாதிக்கும் மேற்பட்ட செட்டாப் பாக்ஸ்கள் தற்போது சரி செய்யப்பட்டுள்ளன. மேலும், கேபிள் ஆபரேட்டர்கள் நேரடியாக செட்டாப்பாக்ஸ்களில் சில மாற்றங்களை செய்து அதை இயக்கும் தற்காலிக தீர்வு குறித்தும் விளக்கப்பட்டு. அம்முறையிலும் இச்சிக்கலுக்குத் தற்காலிக தீர்வு காணப்பட்டுள்ளது.

தற்போது, மென்பொருள்களை வழங்கிய முதன்மை நிறுவனத்துடன் அதை நேரடியாக பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் இந்த தொழில்நுட்ப பிரச்சனைகள் சரி செய்யப்பட்டு சேவைகளை வழங்க அரசு கேபிள் டிவி நிறுவனம் முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறது.

இதுவரையில் அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய கேபிள் ஆபரேட்டர்கள், மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த தற்காலிக பிரச்சனைக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தொழில் நுட்ப உதவிக்கு கிழ் கண்ட எண்களை தொடர்பு கொள்ளவும். அதன் உதவி எண்கள் விவரம் வருமாறு:

காஞ்சிபுரம், ராமநாதபுரம், தேனி. கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு துணை மேலாளரின் 9498017289 என்ற எண்ணையும், கோயம்பத்தூர், திண்டுக்கல், ஈரோடு. கரூர். மதுரை. நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு துணை மேலாளரின் 9498017212 என்ற எண்ணையும், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு துணை மேலாளரின் 9498002607 என்ற எண்ணையும், அரியலூர், கடலூர், பெரம்பலூர், புதுகோட்டை, சிவகங்கை, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கு துணை மேலாளரின் 9498017287 என்ற எண்ணையும், மேலும் சென்னைக்கு 9498017283 என்ற துணை மேலாளரின் 9498017287 எண்ணையும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்தி மக்கள் தொடர்பு துறை தெரிவித்துள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**முயலும் போது முட்களும் உன்னை முத்தமிடும். எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று நீயும் பின் தொடராதே.. உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு..!**



தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | பரிசுப்பொருட்கள்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,920 | Rs.5,322 |

# இன்று 4 மாவட்டங்களில் கனமழை வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை, நவ.22–

"தமிழகத்தில் இன்று 4 மாவட்டங்களில்கனமழை பெய்ய வாய்ப்புள்ளது," என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதாவது: தென்மேற்கு வங்கக் கடலில் நிலவுகின்ற காற்றழுத்த தாழ்வு மண்டலம், காரணமாக இன்று (நவ.22) வட தமிழகம், புதுவை, காரைக்கால், பகுதிகளில் ஒரு சில இடங்களிலும், தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: இன்று 22ம் தேதி ஆந்திர கடலோரப் பகுதிகள், தமிழக - புதுவை கடலோரப் பகுதிகள், இலங்கை கடலோரப் பகுதிகள், தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மன்னார் வளைகுடா பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். இந்த நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம். இவ்வாறு சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

# டிச., 2வது வாரத்திற்கு பின் 'மெட்ராஸ் ஐ' இருக்காது மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நம்பிக்கை



சென்னை, 22–

"தமிழகத்தில் டிசம்பர் 2வது வாரத்திற்கு பின் 'மெட்ராஸ் ஐ' இருக்காது" என்று மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாக 'மெட்ராஸ் ஐ' எனும் கண் நோய் வேகமாக பரவி வருகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலருக்கும் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கண் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக செல்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த நோய் கண்ணில் கன்சங்டிவா என்ற விழி வெண் படலத்தில் ஏற்படும் நோயாகும். இது அடினோ வைரஸ் என்ற கிருமியினால் வருகிறது. இந்நிலையில், 'மெட்ராஸ் ஐ' பரவல் குறித்து நேற்று சென்னை, எழும்பூரில் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் செப்டம்பர் முதல் வாரத்தில் இருந்து 'மெட்ராஸ் ஐ' கூடுதலாக பரவி வருகிறது. கண்ணில் உருத்தல், சிவந்த நிறம், அதிக கண்ணீர், வீக்கம் ஆகியவை 'மெட்ராஸ் ஐ' நோய் அறிகுறி ஆகும். குடும்பத்தில் ஒருவருக்கு பாதிப்பு ஏற்பட்டால் 4 நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ளவும்.

மெட்ராஸ் ஐ வந்தவர்கள் தாமாக மருந்தகங்களில் கண் மருந்து வாங்க வேண்டாம். மருத்துவர் அறிவுறுத்தல்படி மருந்து வாங்கி பயன்படுத்த வேண்டும். டிசம்பர் 2-வது வாரத்திற்கு பின் 'மெட்ராஸ் ஐ' இருக்காது. தமிழகத்தில் தினசரி 4,500 பேர் வரை மெட்ராஸ் ஐ நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

மெட்ராஸ் ஐ பரவுவதை கட்டுப்படுத்த பல்வேறு மருத்துவ மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மெட்ராஸ் ஐ விரைந்து பரவும் தன்மை கொண்டதால் மக்கள் சுயமாக சிகிச்சை எடுத்துக் கொள்ளக் கூடாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மேல்படிப்புக்கு கல்விக்கட்டணம் கட்ட முடியாமல் திணறிய மாணவிக்கு உதவித்தொகை வழங்கல்



தரங்கம்பாடி, நவ.22–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா கேசவன் பாளையத்தில் வசிக்கும், ஏழை மாணவி சௌமியா பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் 563/600 மதிப்பெண் பெற்று, மதுரை மருத்துவக் கல்லூரியில் டாக்டரேட் ஆப் பார்மசிக்கான படிப்பில் சேர மதிப்பெண் அடிப்படையில் இடம் கிடைத்தது. படிப்பிற்கான கல்விக்கட்டணம் செலுத்த முடியாமல் மாணவியின் பெற்றோர் தவித்தனர்.

இந்நிலையில் மாணவியின் தாயாரும், மாணவியும், பல்வேறு சேவைகளை செய்து வரும், பொதுத்தொழிலாளர் சங்க பொறுப்பாளர் மாணிக்க. அருண்குமார் அலுவலகம் சென்று கல்விக்கு உதவி செய்யுமாறு கேட்டிருந்தனர்.

மாணவி சௌமியாவின் உண்மை நிலையை உணர்ந்த மாணிக்க.அருண்குமார் தனது நண்பர்களுக்கு வலைதளம் வாட்ஸ்ஆப் வாயிலாக கோரிக்கை வைத்தார். இதையறிந்த அமராவதி மகிபாலன், ரோட்டரி சங்கத் தலைவர் சக்திமணிகண்டன், தமிழக ஹயர்கூட்ஸ் சங்க தரங்கை தலைவர் கார்த்திகேயன், ராஜி, சதீஷ் ராமலிங்கம், ஆசிரியை மீனாட்சி ரஷ்யா பிரசன்னா, மனோவர்ஷன், ஆதவமித்ரன் மதுமொழி, குட்டியாண்டியூர் செல்வக்குமார், சிங்கப்பூர் கிருஷ்ணன், அனந்தமங்கலம் ராம்குமார் உள்ளிட்டோர் மாணவியின் கல்விக்கு நிதி வழங்கினர். திரட்டப்பட்ட ரூ.20 ஆயிரம் நிதியை மாணிக்க.அருண்குமார் மாணவி சௌமியாவிற்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் ராசமாணிக்கம், சந்தனசாமி, மாணவி சௌமியாவிற்கு, பாராட்டு, வாழ்த்து தெரிவித்த நன்கு படித்து ஏழை மக்களுக்கு சேவையாற்றவும், கல்வி உதவித்தொகை பெற காரணமாக இருந்த மாணிக்க. அருண்குமாரையும் வாழ்த்தினர்.

உதவியை பெற்றுக்கொண்ட மாணவியின் தாயார் ஜான்சிராணி உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அரியலூர் கோதண்டராமசாமி கோயிலில் காணிக்கை எண்ணும் பணி தொடக்கம்



அரியலூர், நவ.22–

அரியலூர் கோதண்டராமசாமி கோயிலில், பக்தர்கள் செலுத்திய காணிக்கை பணம் எண்ணும் பணி நடைபெற்று வருகிறது.

அரியலூர் நகரின் மையப்பகுதியில், பிரசன்ன வெங்கடேச பெருமாளை மூலவராக கொண்ட, கோதண்டராமசாமி கோயில் உள்ளது. அரியலூர் நகரில் பக்தர்கள் அதிகம் வழிபாடு நடத்தும் கோவில்களில் முதன்மையானதும், இப்பகுதியை சார்ந்த மக்கள் பலரும், தனது இல்ல திருமணத்தை நடத்துவதற்காக வந்து செல்லும் முக்கியத்தலமாக இக்கோயில் விளங்குகிறது.

இக்கோயிலில், மகாவிஷ்ணுவின் 10 அவதாரங்களும், 10 தூண்களில் சிற்பமாக வடிவமைக்கப் பட்டுள்ளது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். பல 100 ஆண்டுகளுக்கு முந்தைய பழமை வாய்ந்த இக்கோயிலுக்கு, பக்தர்கள் செலுத்திய பணம் மற்றும் நாணயங்கள் எண்ணும் பணி, 21ம் தேதி நேற்றைய தினம் நடைபெற்றது.

கடலூர் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர் ஜோதி உத்தரவுப்படி, அரியலூர் கோதண்ட ராமசாமி கோயில் செயல் அலுவலர் சரவணன் மேற்பார்வையில், கோயில் தக்கார், பணியாளர்கள், மற்றும் மக்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.




# நித்திய கல்யாணி சமேத ஸ்ரீ சுயம்பு நாதர் ஆலயத்தில் 108 சங்காபிஷேகம் கோலாகலம்



தரங்கம்பாடி, நவ.22–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, நல்லுச்சேரியில் உள்ள பழமை வாய்ந்த நித்திய கல்யாணி சமேத ஸ்ரீ சுயம்பு நாதர் ஆலயத்தில் கார்த்திகை மாத சோமவாரம் மற்றும் பிரதோஷம் முன்னிட்டு 108 சங்காபிஷேகம் மற்றும் ருத்ர ஹோமம் நடைபெற்றது.

முன்னதாக சுயம்பு நாதர் மற்றும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு அலங்காரத்துடன் தீபாராதனை காட்டி வழிபாடு நடத்தினர். சங்காபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்து வழிபட்டனர். உலக நன்மை வேண்டி சிறப்பு ஹோமம் நடைபெற்றது.

சிவாச்சாரியார்கள் கார்த்திகேயன் மற்றும் கணேசன் ஆகியோர் சிறப்பு பூஜைகளை செய்தனர்.



▶ திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த அரட்டவாடி ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் "கலைத் திருவிழா" சார்பில், நாடக கலைஞர்கள், மாணவர்களுக்கு நாடக பயிற்சி பயிற்சி அளித்தனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் சதாசிவம் தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் மதி, அறிவியல் ஆசிரியை கார்த்திகா மற்றும் பள்ளியின் இருபால் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை அருகே விபத்து கல்லூரி மாணவி பரிதாப பலி



கந்தர்வகோட்டை, நவ.22–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகில் உள்ள முதுகுளம் கிராமத்தைச் சேர்ந்த கருப்பன் மகள் மீனா சுந்தரி. கல்லூரி மாணவியான இவர் தஞ்சாவூர் அரசினர் குந்தவை நாச்சியார் கல்லூரியில் படித்து வருகிறார்.

வழக்கம்போல் இவர் நேற்று தனது அண்ணன் கனகராஜ் உடன் இரண்டு சக்கர வாகனத்தில் தனது வீட்டில் இருந்து கல்லூரிக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது வீரடிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமி என்பவருக்கு சொந்தமான சோளம் ஏற்றி வந்த டிராக்டர் எதிர்பாராத விதமாக இரு சக்கர மோட்டார் வாகனத்தின் மீது மோதியது. இதில் பலத்த காயம் அடைந்து முகம் சிதைந்த நிலையில் மீனா சுந்தரி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

அவரது அண்ணன் கனகராஜ் படுகாயங்களுடன் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். டிராக்டர் ஓட்டுநர் தலைமறைவு ஆகிவிட்டார். இதுகுறித்து கந்தர்வகோட்டை காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உடுமலை பஞ்சலிங்க அருவியில் கொட்டும் மூலிகை நீர்: சுற்றுலாப்பயணிகள் குதூகலம்



உடுமலை, 22–

திருப்பூர் மாவட்டம் உடுமலை வனச்சரகத்தின் அடர்ந்த வனப்பகுதியில் பஞ்சலிங்க அருவி உள்ளது. இந்த அருவிக்கு மேல்குருமலை, கீழ்குருமலை, குழிப்பட்டி பகுதியில் உற்பத்தியாகின்ற ஆறுகள், ஓடைகள் நீராதாரமாக உள்ளது.

நீர்வழித்தடங்களில் உள்ள மூலிகைகள் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது அதில், தானாகவே கரைந்து விடுகிறது. இதனால் தண்ணீர் உடலின் மேல் விழும்போது உடலும், உள்ளமும் புத்துணர்ச்சி பெறுவதுடன் மன அழுத்தம் குறைந்து விடுகிறது. இதனால் அதில், குளித்து புத்துணர்வு பெறுவதற்காக வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் திருமூர்த்தி மலைக்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், வடமேற்கு பருவமழை தீவிரமடைந்ததை முன்னிட்டு கடந்த வாரம் பஞ்சலிங்க அருவியின் நீராதாரங்களில் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக வனப்பகுதியில் உள்ள ஆறுகள் மற்றும் ஓடைகளில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. பாதுகாப்பற்ற சூழல் நிலவியதால் அருவியில் குளிப்பதற்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டு வந்தது.

தற்போது சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இதனால் திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் சுற்றுலா பயணிகள் நாள்தோறும் குவிந்து வருகின்றனர். சபரிமலை சீசன் என்பதால் ஐயப்ப பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகளவில் காணப்படுகிறது. உற்சாகமாக மூலிகை நீரில் குளித்து விட்டு சபரிமலை சென்று வருகின்றனர்.

# சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உலக குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்



சென்னை, நவ.22–

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை பகுதியில் அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு சார்பாக உலக குழந்தைகள் தின விழா கொண்டாட்டம் மற்றும் அருணோதயா குழந்தைகள் சங்க மாநாடு, குழந்தைகள் விரும்பும் வன்முறையற்ற மகிழ்ச்சியான உலகம் என்கிற தலைமைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், தண்டையார்பேட்டை மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் மற்றும் காசிமேடு சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் பிரான்வின் டேனி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளிடையே உரையாற்றினர். இந்நிகழ்வில், குழந்தைகள் விளையாட்டுகள், கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், கனவுகள் நினைவாகும் பயணம் ஆவணப்படம் வெளியீடு, வீதியோர குழந்தைகள் உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்ற கருணாலயா பெண் குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சி உள்ளிட்டவைகள் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தண்டையார்பேட்டை மண்டலகுழுதலைவர் நேதாஜி யு. கணேசன் பேசுகையில், தமிழக முதல்வர் பள்ளி மாணவ, மாணவியருக்கு பல எண்ணற்ற நல்ல திட்டங்களை கொண்டு வந்துள்ளார். சமீபத்தில் பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் போன்ற பல எண்ணற்ற திட்டங்களை தொடங்கி மாணவ, மாணவிகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த உலக குழந்தைகள் தினத்தில் முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இதில், ஏராளமான மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

# புதுகை தேசிய தமிழ் இலக்கிய பேரவை கருத்தரங்கு



**புதுக்கோட்டை, நவ.22–**

புதுக்கோட்டை தேசிய தமிழ் இலக்கிய பேரவை சார்பில் புதுக்கோட்டை அறிவியல் இயக்கத்தின் அலுவலகத்தில் வரலாறு படைத்த ஆளுமைகள் என்ற தலைப்பில் முன்னாள் பிரதமர்கள் ஜவஹர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி மற்றும் இந்திரா காந்தி ஆகியோரின் ஆட்சியில் நடைபெற்ற செயல்பாடு மற்றும் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் மற்றும் இந்திய விடுதலைக்காக செய்த போராட்டங்கள், தியாகங்கள் குறித்த கருத்தரங்கு முன்னாள் நகர் மன்ற தலைவர் துரை. திவ்யநாதன் தலைமையில் நடந்தது.

காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் சந்திரசேகரன், காங்கிரஸ் வழக்கறிஞர்கள் பிரிவுகள் நிர்வாகி ராதாகிருஸ்ணன், துணை ஆட்சியர் ஓய்வு சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது

நிகழ்ச்சியில், புதுக்கோட்டை வட்டார காங்கிரஸ் தலைவரும், தமிழ் தேசிய இலக்கிய பேரவை நிர்வாகியுமான சூர்யா பழனியப்பன் அனைவரையும் வரவேற்றார்.

விழாவில், உன்னதபுரம் கிழக்கு என்ற நாவலை எழுதிய ஓய்வு பெற்ற துணை ஆட்சியர் மோகன் ராஜூக்கு காந்தி பேரவை தலைவர் தினகரன் மற்றும் கருத்தாளர் வேதரத்தினம் ஆகியோர் பொன்னாடை அணிவித்தனர். இதற்கான ஏற்பாடுகளை எயம் பள்ளி தாளாளர் கந்தசாமி செய்திருந்தார்.

# லட்சுவாக்கம் மக்கள் வீட்டுமனை பட்டா வேண்டி காத்திருப்பு போராட்டம்: அதிகாரிகள் சமரசம் வீண்!

ஊத்துக்கோட்டை,நவ22-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பாலவாக்கம் ஊராட்சியை சேர்ந்த லட்சுவாக்கம் கிராம மக்கள் 100க்கும் மேற்பட்டோர் வீட்டு மனை பட்டா வேண்டி சுமார் 40 ஆண்டு காலமாக போராடி வருகின்றனர். இந்நிலையில், கடந்த மாதம் நடைபெற்ற போராட்டத்தின்போது 15 நாட்களில் வீட்டு மனை பட்டா வழங்குவதாக வருவாய்த்துறையினர் கூறியிருந்தனர்.



ஆனால், வீட்டு மனை பட்டா வழங்காததால் நேற்று இவர்கள் இங்குள்ள செல்லியம்மன்கோவில்அருகே காலை முதல் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய ஜனநாயக மாதர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களான கண்ணன், வக்கீல்ஜீவா, தண்டலம்ரமேஷ், பெரியபாளையம் அருள் உள்ளிட்ட ஏராளமானோர் கிராம மக்களுக்கு ஆதரவாக காத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொண்டனர்

நேற்று மதியம் ஊத்துக்கோட்டை தனி துணை வட்டாட்சியர் அம்பிகா, கிராம நிர்வாக அதிகாரி ரகு, ஊத்துக்கோட்டை காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏழுமலை உள்ளிட்டோர் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று மக்கள் அனைவரும் காத்திருப்பு போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். இதனால் இப்பகுதியில் பரபரப்பு நிலவுகிறது.

# பெற்றோர்கள் ஒரு மணிநேரமாவது குழந்தைகளிடம் பேசுங்கள்: ஈரோடு மகளிர் இன்ஸ்பெக்டர் அறிவுரை

ஈரோடு , நவ.22-

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் தினமும் ஒரு மணி நேரமாவது ஒதுக்கிப் பேச வேண்டும் என்று ஈரோடு மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் நிர்மலாதேவி அறிவுரை வழங்கினார்.




ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையம் அடுத்து அக்ரஹாரம் செல்லும் வழியில் அமைந்துள்ள கிறிஸ்து ஜோதி மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியில் விளையாட்டு தின விழா நடைபெற்றது.

விழாவில், ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் நிர்மலாதேவி சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பள்ளி மாணவிகளுக்கு பல்வேறு வகையான விழிப்புணர்வு ஏற்படுத்தினார். பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளை பாதுகாப்பது போல பள்ளி மாணவிகளை பாதுகாக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் தினமும் ஒரு மணி நேரமாவது ஒதுக்கிப் பேச வேண்டும் என்றும் நிர்மலாதேவி அறிவுரை வழங்கினார்.

மேலும், பள்ளி குழந்தைகளுக்கான பல்வேறு விதமான போட்டிகள் நடத்திய பள்ளி நிர்வாகத்திற்கு பாராட்டு தெரிவித்தார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கி சிறப்பித்தார்.

# சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கல்

சீர்காழி, நவ.22-

சீர்காழி விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் 50ம் ஆண்டு பொன்விழா முன்னிட்டு பல்வேறு நலதிட்டப்பணிகள் செய்து வருகின்றனர்.




அதன் ஒருநிகழ்வாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் 50 பேருக்கு தலா 2,000 ரூபாய் மதிப்பிலான அரிசி, மளிகை பொருட்கள் மற்றும் போர்வை ஆகியவற்றை பள்ளி தாளாளர் ராதாகிருஷ்ணன், செயலர் அனிதா வழங்கினர். இதில், ஆசிரியர் கோவி நடராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், குட் சமாரிட்டன் கல்வி நிறுவனங்களின் இயக்குனர்கள் பிரவீண் வசந்த், அனுஷா பிரவீண், அலெக்சாண்டர், ரினிஷா ஜோன், விவேகானந்தா பள்ளி முதல்வர் ஜோஸ்வா பிரபாகரசிங், துணை முதல்வர் சரோஜா தாமோதரன் ஆகியோர் பங்கேற்றனர்.

# நெய்வேலி கிராமத்தில் மாடு முட்டியதில் சிகிச்சை பலனின்றி மூதாட்டி பரிதாப சாவு

**ஊத்துக்கோட்டை, நவ22-**

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருகே நெய்வேலி கிராமம், மேட்டு தெருவை சேர்ந்தவர் முனியம்மாள் (69). இந்த மூதாட்டி நேற்று முன்தினம் தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்.

அப்பொழுது அவ்வழியே சென்ற மாடுகள் ஒன்றோடு ஒன்று முட்டிக்கொண்டு சண்டையிட்டுக் கொண்டு ஓடி வந்து மூதாட்டியை முட்டி கீழே தள்ளியது. இதில், படுகாயமடைந்த மூதாட்டி ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார். அவரது கூக்குரலை கேட்டு அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதித்தனர்.



அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று காலை பரிதாபமாக இறந்தார். இச்சம்பவம் குறித்து மூதாட்டியின் மகன் சீனிவாசன் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து இந்தச் சம்பவம் குறித்து விசாரணை செய்கின்றனர்.

# சீனாவில் வேகமாக பரவும் கொரோனா: 2 பேர் பலி மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிப்பு

பெய்ஜிங், 22-

சீனாவின் வுகான் நகரத்தில் கடந்த 2019ம் ஆண்டு கடைசியில் முதன் முதலில் கொரோனா நோய் கண்டறியப்பட்டது. அதன் பிறகு இந்தியா உள்பட உலகம் முழுவதும் இந்த தொற்று வேகமாக பரவியது. இதனால் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். சுமார் 2 ஆண்டுக்கும் மேலாக உலகத்தை ஆட்டிப்படைத்த கொரோனா படிப்படியாக குறைந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினாலும் இன்னும் தொற்று முடிவுக்கு வரவில்லை.

சீனாவில் கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி, தனிமைப்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் மக்கள் பீதி அடைந்துள்ளனர். கடந்த மே மாதத்திற்கு பிறகு கொரோனா பலி இல்லாமல் இருந்தது.

இந்நிலையில் 6 மாதங்களுக்கு பிறகு ஞாயிற்றுக்கிழமை முதன் முறையாக தலைநகர் பீஜிங்கில் கொரோனாவுக்கு 87 வயது முதியவர் இறந்தார். இதன் தொடர்ச்சியாக 91 வயது பெண்ணும் உயிர் இழந்தார். நேற்று ஒரே நாளில் கொரோனாவால் 24 ஆயிரத்து,215 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களில் ஏராளமானோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா மீண்டும் வேகமெடுக்க தொடங்கி அடுத்தடுத்து 2 பேர் பலியானதால் பீஜிங்கில் மறுபடியும் கடுமையான கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான வணிக வளாகங்கள், கடைகள் மூடப்பட்டுள்ளன. பூங்காக்கள், உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் அலுவலகங்களை மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. ஓட்டல்களில் உட்கார்ந்து சாப்பிட அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டு உள்ளது. அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதால் ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. பெரும்பாலான பகுதிகளில் பள்ளிகள் மூடப்பட்டதால் மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்பு நடத்தப்படுகிறது.

தேவை இல்லாமல் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர தடை விதிக்கப்பட்டு உள்ளதால் அவர்கள் வீடுகளிலேயே முடங்கி கிடக்கின்றனர். கொரோனா பரவலை தடுக்க சீனா அரசு தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.



▶ வடசென்னை ஆர்.கே.நகரில் நடிகர் அருண் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு வடசென்னை மாவட்ட ரசிகர்கள் மன்றம் சார்பாக ஏழை, எளியோருக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இதில், சிறப்பு அழைப்பாளராக பா.ஜ., சிந்தனையாளர் பிரிவு மாநில செயலாளர் நடராஜன், அகில இந்திய தலைவர் சிவ.தினேஷ் அருண், அகில இந்திய செயலாளர் அமல்ராஜ் கலந்து கொண்டனர். இதில், மாவட்ட நிர்வாகிகள், ரசிகர்கள் கலந்து கொண்டனர்.



▶ உலக மீன்வளம் தினத்தை முன்னிட்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர் தினத்தில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குடியாத்தம் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கத்தின் 3 உறுப்பினர்களுக்கு தலா ரூ.20,465 மானியத்துடன் ரூ.13,721 மதிப்பிலான குளிர் காப்பு பெட்டி பொருத்திய இரு சக்கர வாகனங்களை மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ராமமூர்த்தி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, மீன்வளத்துறை உதவி இயக்குநர் கங்காதரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



▶ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதேமில்லத் கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நல அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் நல பள்ளிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் பணிபுரிந்து வரும் சிறந்த காப்பாளர்கள் மற்றும் காப்பாளி பணியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு தொகைகளை மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ராமமூர்த்தி, பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நல அலுவலர் சீதா, மாவட்ட உணவு வழங்கல் அலுவலர் சுமதி மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

# கொசவன்பேட்டையில் வாகன சோதனை கஞ்சா கடத்தி வந்த 2 வாலிபர்கள் கைது

## புழல் சிறையில் அடைப்பு



ஊத்துக்கோட்டை, நவ 22-

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே கொசவன்பேட்டை ஊராட்சி, அஞ்சாத்தம்மன் கோவில் பஸ் நிறுத்தம் அருகே பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் எஸ்.ஐ., திருமுருகன் தலைமையில், போலீசார் ராஜி, தமிழரசன் ஆகியோர் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியே ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு வாலிபர்கள் வந்தனர். அவர்களை போலீசார் மடக்கி பிடித்து விசாரணை மேற்கொண்டபோது முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறினர். போலீசார் அவர்களிடம் துருவித்துருவி விசாரணை செய்தபோது பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த தமிழ்ச்செல்வன் (வயது22), அஞ்சாத்தம்மன் கோவில் பகுதியை சேர்ந்த பூபதி (வயது19) என்பதும் அவர்கள் கஞ்சா பொட்டலங்களை மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்து விற்பனை செய்வதையும் ஒப்புக்கொண்டனர்.

போலீசார், மோட்டார் சைக்கிளுடன் கஞ்சாவை பறிமுதல் செய்து குற்றவாளிகள் இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்து ஊத்துக்கோட்டை முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். பின்னர், மாஜிஸ்திரேட் உத்தரவின் பேரில், குற்றவாளிகள் இருவரையும் புழல் சிறையில் அடைத்தனர்.

# ஈரோட்டில் உலக நன்மை, விவசாயம் செழிக்க 10,000 இஸ்லாமியர்கள் கூட்டுப் பிரார்த்தனை

ஈரோடு, நவ.22-

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருந்தேவன் பாளையத்தில் இஸ்லாமிய ஆண்கள் மட்டுமே பங்கேற்ற இஸ்திமா என்னும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் இஸ்லாமிய உலமாக்கள் பங்கேற்று (அல்லாஹ்) இறைவனை பற்றியும், இறைத்தூதர் நபிகள் நாயகம் வாழ்வியல் குறித்தும், நபி தோழர்களின் வரலாறுகள் குறித்தும் விளக்கினர்.

இதையடுத்து உலக நன்மைக்காக வேண்டியும், பெருந்தொற்று நோய்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டியும், விவசாயம் செழிக்கவும், நெசவுத்தொழில்சிறப்படையவும் சிறப்புத் தொழுகை, சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

ஈரோடுமாவட்டகாவல்துறை கண்காணிப்பாளர் சசி மோகன் உத்தரவிற்கிணங்க, மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் தீபா தலைமையில் 50க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

# ராணிப்பேட்டை ஆற்காடு பெஸ்ட் நியூ லைப் ஷெல்டர் சிறப்பு பள்ளியில் மாவட்ட விளையாட்டுப்போட்டி

**ராணிப்பேட்டை, நவ,22-**

ராணிப்பேட்டை ஆற்காடு ஹாசன் புறா பகுதியில் அமைந்துள்ள பெஸ்ட் நியூ லைப் ஷெல்டர் சிறப்பு பள்ளியில் அகில உலக அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் தினம் 2022ஐ முன்னிட்டு மாற்றுத்திறனா ளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டி மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் உத்தரவின்படி மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் பாபு துவக்கி வைத்தார்.



பெஸ்ட் நியூ லைஃப் ஷெல்டர் சிறப்பு பள்ளி தாளாளர் கேத்ரின் இன்பராஜ் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி பள்ளி தாளாளர் பாலாஜி கலந்து கொண்டார். உடற்பயிற்சி ஆசிரியர் பாலகிருஷ்ணன், பிசியோதெரபிசியன் தீப்த்தி ஜெனிபர், ஊழியர்கள், பள்ளி மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள், மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் விஷ்வாஸ் சிறப்பு பள்ளி, நேசம் சிறப்பு பள்ளி, அரக்கோணம் ஸ்மார்ட் சிறப்பு பள்ளி மற்றும் வொர்த் அறக்கட்டளை இளம் சிறார்களுக்கான ஆரம்ப கால பயிற்சி மைய பள்ளி விளையாட்டு வீரர்கள், பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# சி.வி.எம்.அண்ணாமலை 106வது பிறந்த நாள் காஞ்சிபுரத்தில் இலவச மருத்துவ முகாம்

காஞ்சிபரம், நவ.22-

காஞ்சிபுரத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர் சி.வி. எம்.அண்ணாமலை பிறந்த நாளை முன்னிட்டு, இலவச மருத்துவ முகாம் நடந்தது.



தி.மு.க.,வின் முக்கிய நிர்வாகியாக இருந்தவரும், முன்னாள் சமூக நலத்துறை அமைச்சருமான சி.வி.எம்., அண்ணாமலையின் 106-வது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் மேல்நிலை பள்ளியில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

வானகரம் அப்போலோஸ் பெஷாலிட்டி மருத்துவமனை, காஞ்சிபுரம் லைஃப் கேர் மருத்துவமனை, காஞ்சிபுரம் குமார்ஸ் கண் சிகிச்சை மையம் இணைந்து காஞ்சிபுரம் சி.வி.எம். அண்ணாமலை அறக்கட்டளை சார்பில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க., செயலாளரும் உத்திரமேரூர் எம்.எல்.ஏ.,வுமான க.சுந்தர், காஞ்சிபுரம் எம்.பி., செல்வம், காஞ்சிபுரம் எம்.எல்.ஏ., எழிலரசன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

மருத்துவ முகாமில் பங்கேற்றவர்களுக்கு, ரத்த அழுத்த பரிசோதனை, சர்க்கரை பரிசோதனை, இ.சி.ஜி., எக்கோ, எக்ஸ்ரே, நுரையீரல் பரிசோதனை, கண் பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை உள்ளிட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டது.

முகாமில், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ், தி.மு.க., மாநகர செயலாளர் தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் குமார் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள், கட்சியினர் பங்கேற்றனர்.

# மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் உலக மீன்வள தின விழா கொண்டாட்டம்

காரைக்கால், நவ.22-

காரைக்கால் மாதூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் உலக மீன்வள தின விழா கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயசங்கர் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். உலக மீன் உற்பத்தியில் நமது நாட்டின் பங்கு, மீன் வளர்ப்பில் விவசாயிகளுக்கு கிடைக்கும் வருவாய் பெருக்கம் மற்றும் மீன் உண்பதால் கிடைக்கும் சத்துக்கள் பற்றி அவர் எடுத்துரைத்தார்.



தொடர்ந்து வேளாண் நிலைய கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் மருத்துவர் கோபு ஒருங்கிணைந்த முறையில் மீன் வளர்ப்புடன் சேர்ந்து ஆடு, மாடு, கோழி வளர்ப்பு முறைகள் மற்றும் அதனால் கிடைக்கும் கூடுதல் வருமானம் பற்றி விளக்கி கூறினார். மீன்வள உதவி ஆய்வாளர் முருகேசன், நவீன மீன் வளர்ப்பு முறைகள் மற்றும் மீன் வளர்ப்பில் கிடைக்கும் வருவாய் பெருக்கம் பற்றி எடுத்துரைத்தார்.

அதைத் தொடர்ந்து நெடுங்காடு, சுரக்குடி, விழிதியூர் பகுதியை சேர்ந்த மூன்று மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு முன்னோடி செயல் விளக்க குளம் திட்டத்தில் தலா ஒருவருக்கு 1,250 எண்ணிக்கையில் துரிதமாக வளரக்கூடிய புதிய ரக கிப்ட் திலேபியா மீன் குஞ்சுகளை வேளாண் நிலைய முதல்வர் வழங்கினார். நிறைவாக தோட்டக்கலை துறை தொழில்நுட்ப வல்லுநர் கதிரவன் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 26 மீன் வளர்ப்பு விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.




▶ குடும்ப நலத்துறையின் நவீன ஆண் குடும்பநல கருத்தடை உலக நவீன வாசக்டமி வாரம் 2022, 21.11.2022 முதல் 4.12.2022 வரை இருவார விழா முன்னிட்டு என்.எஸ்.வி. விழிப்புணர்வு வாகனத்தை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக்கதில் இருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். அனீஷ் சேகர் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# திருமயம் – மெய்யபுரம் கல்குவாரியை மூட கோரி மறியலில் ஈடுபட்ட பெண்கள் கைதாகி விடுதலை



திருமயம், நவ.22-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகிலுள்ள மெய்யபுரத்தில் கல்குவாரியை மூட வலியுறுத்தி, மதுரையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சாலைமறியலில் ஈடுபட்ட பெண்கள் கைதாகி விடுவிக்கப்பட்டனர்.

கடந்தாண்டு மார்ச் மாதம் கல்குவாரி அனுமதியின்றி செயல்படுகிறது என கலெக்டரிடம் மனு அளித்தும் இதுவரை நடவடிக்கை இல்லை. இதனால், ஆவேசமடைந்த பெண்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

கல்குவாரியில் சப்தத்துடன் வேட்டு வைப்பதால் அருகில் இருக்க கூடிய வீடுகள், கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகளில் விரிசல் ஏற்படுகிறது. குவாரியிலிருந்து வரும் சப்தம் இரைச்சலை ஏற்படுத்துவதால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று பெண்கள் குற்றம்சாட்டினர்.

பெண்கள் மறியல் குறித்து தகவலறிந்த வட்டாட்சியர் ப்ரவீனா மேரி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருமயம் போலீஸார் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். தொடர்ந்து மறியல் நடந்ததால் திருமயம் போலீசார் பெண்களை வலுக்கட்டாயமாக தூக்கிச்சென்று கைது செய்யப்பட்டு மாலை விடுதலையாகினர். இதற்கு எஸ்.டி.பி.ஐ., உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.






ஆலங்குடி அருகே உள்ள செரியலூர் கிராமத்தின் வழியாக செல்லும் அம்புலி ஆற்றின் குறுக்கே செரியலூர் பகுதியில் தடுப்பணை கட்ட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், உதவி பொறியாளர் ஜெயபுஷ்பா, தடுப்பணை கட்டப்பட உள்ள இடத்தை ஆய்வு செய்தார். இதில் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் உடனிருந்தனர்.

# அறந்தாங்கி அருகே ரூ.7 கோடியில் உயர்மட்ட மேம்பாலம் சுற்றுச்சூழல் அமைச்சர் மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்



அறந்தாங்கி, நவ.22-

அறந்தாங்கி அருகே 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த காட்டாறு தரைப்பாலத்தை ரூ.7 கோடி மதிப்பில் உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கு அமைச்சர் மெய்யநாதன் நேற்று அடிக்கல் நாட்டினார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே அரசர்குளம் தென்பாதி, வடபாதி ஊராட்சிக்குட்பட்ட பழுதடைந்த காட்டாறு தரைப்பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக உயர்த்தி தர அப்பகுதி மக்கள் ஆலங்குடி எம்.எல்.ஏ.,வும், சுற்றுச்சூழல் துறை அமைச்சருமான மெய்யநாதனிடம் கோரிக்கை வைத்தனர். அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று காட்டாறு தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டுவதற்கு தமிழக அரசு ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது.

அதற்கான பூமி பூஜை பணிகள் நேற்று தொடங்கப்பட்டது. இதில், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் பங்கேற்று பூமிபூஜை செய்து அடிக்கல் நாட்டினார். அதன்பின் அமைச்சர் பேசுகையில், வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வரக்கூடிய சூழலில் மழைக்காலங்களில் காட்டாறு தரைப்பாலத்தை கடந்து செல்வதற்கு இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். தற்போது காட்டாற்றில் மேம்பாலம் கட்டும் பணி தொடங்கி உள்ளது. இந்த பகுதிகளில் உள்ள தரைப்பாலத்தை உயர்மட்ட மேம்பாலமாக அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில், வருவாய் கோட்டாட்சியர் சொர்ணராஜ், வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள், மக்கள் கலந்து கொண்டனர்.

# இயற்கை பேரிடர் மேலாண்மை பயிற்சிக்கான இளையோர் பயணம்: புதுகையில் துவக்கி வைப்பு




புதுக்கோட்டை, நவ.22-

நேரு யுவ கேந்திரா சார்பாக இளைஞர்கள் இயற்கை பேரிடர் மேலாண்மை பயிற்சிக்கு வழி அனுப்பு விழா புதுக்கோட்டையில் நடந்தது.

புதுக்கோட்டை, நேரு யுவ கேந்திரா சார்பாக அரக்கோணம் ராணுவ முகாமில் உள்ள நான்காவது பெட்டாலியன் நடத்தக்கூடிய இயற்கை பேரிடர் மேலாண்மை குறித்த ஒரு வார கால பயிற்சி முகாமிற்கு 26 இளைஞர்களும் 4 இளம் பெண்களும் தேர்வாகி பயிற்சி பெற உள்ளனர். இவர்களை வழி அனுப்பும் விழா நடந்தது.

நேரு யுவகேந்திரா மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளர் ஜோயல் பிரபாகர் தலைமை வகித்தார். புத்தாஸ் வீரக்கலைக் கழக நிறுவனர் சேது கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். இளையோர் குழுத் தலைவர் ஹரிகரன் வரவேற்றார். மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் சதாசிவம், மாவட்ட அறிவியல் இயக்க தலைவர் வீரமுத்து ஆகியோர் பயிற்சியில் பங்கேற்க செல்லும் இளையோரை வாழ்த்தினர். தேசிய இளையோர் தொண்டர் வாசு நன்றி கூறினார்.

நேரு யுவகேந்திரா மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளர் ஜோயல் பிரபாகர் இளையோர், இயற்கை பேரிடர் மேலாண்மை பயிற்சிக்கான பயணத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# கோவை – மங்களூரு சம்பவங்களுக்கு தொடர்பு உள்ளதா? தனித்தனி குழுக்களை அனுப்பி போலீஸார் விசாரணை



கோவை, நவ.22-

கோவை கார் வெடிப்பு மற்றும் மங்களூரு ஆட்டோ குண்டு வெடிப்பு ஆகிய இரண்டு சம்பவங்களுக்கு தொடர்பு உள்ளதா? என்பது குறித்து தனித்தனி குழுக்களை அனுப்பி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கர்நாடக மாநிலம் மங்களூருவில் கடந்த 19ம் தேதி சாலையில் சென்ற ஆட்டோவில் குக்கர் குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த கர்நாடக மாநிலம் ஷிவமோகாவைச் சேர்ந்த முகமது ஷரீக் (27) என்பவருக்கு தொடர்பிருப்பது தெரியவந்தது. அவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து அவரது வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் வெடிகுண்டு தயாரிக்க தேவைப்படும் மூலப் பொருட்களை போலீஸார் கண்டறிந்து பறிமுதல் செய்துள்ளனர். ஆட்டோ குண்டு வெடிப்புச் சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மங்களூரு போலீஸார் மட்டுமின்றி, என்.ஐ.ஏ., அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, கடந்த மாதம் 23ம் தேதி கோவை கோட்டைமேட்டில் கார் வெடிப்புச் சம்பவம் நடந்தது. கோட்டை சங்கமேஸ்வரர் கோயில் அருகே நடந்த இந்த வெடிப்புச் சம்பவத்தில் காரை ஓட்டி வந்த ஜமேஷா முபின் (25) என்பவர் உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக உக்கடம் போலீஸார் முதலில் விசாரித்து 6 பேரை கைது செய்தனர்.

உயிரிழந்த முபின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் 75 கிலோ வேதிப்பொருட்கள் உள்ளிட்டவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர். மேலும், உயிரிழந்த முபின் ஐ.எஸ்.ஐ.எஸ்., தீவிரவாத அமைப்பின் ஆதரவாளர் என்பதையும் கண்டறிந்தனர்.

அதாவது, கோவை கோட்டைமேட்டில், சங்கமேஸ்வரர் கோயிலுக்கு மிக அருகே கார் வெடிப்புச் சம்பவம் நடந்தது. அதேபோல், மங்களூருவில் ஆட்டோவில் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்த பகுதியில் 100 மீட்டர் தூரத்தில் சிவன் கோயில் உள்ளது என்பது போலீஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனவே, கோயில்களை மையமாக வைத்து தாக்குதல் என்ற அடிப்படையில் கோவை கார் வெடிப்புச் சம்பவம், மங்களூரு ஆட்டோ குண்டு வெடிப்புச் சம்பவம் ஆகியவற்றுக்கு தொடர்பிருக்கலாம் என போலீஸார் சந்தேக்கின்றனர். அதனடிப்படையிலும் தனிப்படைக் குழுவினர் விசாரித்து வருகின்றனர்.

# ஆலத்தூரில் துணை சுகாதார நிலைய அடிக்கல் நாட்டு விழா



ஆவுடையார்கோவில், நவ.22-

மீமிசல் ஆலத்தூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

ஆவுடையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள மீமிசல் ஆலத்தூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இருந்தது. அது மிகவும் பாழடைந்து இடிந்தது விழுந்தது. அதைத் தொடர்ந்து தற்போது அந்த துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செந்தில்குமரன், ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் செல்வம், ஆலத்தூர் நீர்நிலை பாசன சங்க தலைவர் சக்திவேல் மற்றும் கிராமத்தினர் மற்றும் குணசேகரன், ஆத்மநாதன், முருகன், மீமிசல் ஊராட்சி செயலாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பின்னர் அனைவரும் துணை சுகாதார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினர். இந்த துணை சுகாதார நிலையத்திற்கு அரசால் ஒதுக்கப்பட்ட நிதி 38 லட்சத்து, 65 ஆயிரம் ஆகும். இதனால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ஆலங்குடி அருகே காலிக்குடத்துடன் சுத்தமற்ற குடிநீர் கண்டித்து மறியல்



ஆலங்குடி, நவ.22-

ஆலங்குடி அருகே கொத்தமங்கலத்தில் சுத்தமற்ற குடிநீர் வழங்கிய ஊராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கொத்தமங்கலம் ஊராட்சி கூலாட்சி கொல்லை பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மின்மோட்டார் பழுதாகியுள்ளது. இதனால், அப்பகுதி மக்களுக்கு கடந்த ஒரு மாதமாக குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளது. சில நாட்களுக்கு முன் காவிரி கூட்டுக்குடிநீர் மூலம் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் நடைபெற்றுள்ளது. அந்த தண்ணீர் மிகவும் கலங்களாக, சுத்தமற்ற முறையில் இருந்துள்ளது. இதுகுறித்து பல முறை முறையிட்டும் ஊராட்சி நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால், அப்பகுதி மக்கள் உடனே முறையாக குடிநீர் வழங்கக்கோரி காலிக்குடங்களுடன் வாடிமாநகர் கடைவீதியில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த, கீரமங்கலம் போலீஸார், திருவரங்குளம் ஒன்றிய அலுவலர்கள் இரு நாட்களுக்குள் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். இதைத்தொடர்ந்து, மறியலில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.

# கறம்பக்குடியில் மழைக்கால இலவச மருத்துவ முகாம்



கறம்பக்குடி நவ 22;

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே பன்னீர் தேவர் தனியார் மஹாலில் பன்னீர் தேவர் நினைவுக் கல்வி அறக்கட்டளை மற்றும் கறம்பக்குடி அரசு மருத்துவமனை சித்தா மருத்துவப் பிரிவு திருச்சி அப்பல்லோ சிறப்பு மருத்துவமனை இணைந்து மழைக்கால இலவச சிறப்பு பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

பன்னீர் தேவர் நினைவு அறக்கட்டளை அறங்காவலா் பேராசிரியர் தங்க ரவிசங்கர் தலைமை வகித்தார். பன்னீர் தேவர் நினைவு அறக்கட்டளை தலைவர் கரிகாலன் குத்துவிளக்கேற்றி விழாவை துவங்கி வைத்தார். மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் வனஜா சிறப்புரையாற்றினார். பன்னீர் தேவர் நினைவு அறக்கட்டளை செயலாளர் கருப்பையா நன்றி கூறினார்.

இந்த மருத்துவ முகாமில் ரத்த அழுத்தம் பரிசோதனை, ரத்தத்தில் சர்க்கரை பரிசோதனை, எக்கோ, இ.சி.ஜி., பரிசோதனை மாத்திரை, மருந்துகள் மக்களுக்கு இலவசமாக வழங்கி சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமில் 200க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

# தென்காசி ஆட்சியரிடம் திரிகூடபுரம் ஒன்றிய கவுன்சிலர் கோரிக்கை மனு வழங்கல்



தென்காசி, நவ.22-

தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் திரிகூடபுரம் ஒன்றிய கவுன்சிலர் அருணாசல பாண்டியன், பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்தது சம்பந்தமாக கோரிக்கை மனு அளித்தார்.

அம்மனுவில் தெரிவித்திருப்பதாவது: தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியம் திரிகூடபுரம் கிராமத்தில் இந்து நடுநிலைப்பள்ளி உள்ளது. இது சுமார் 100 ஆண்டுகள் பழமையானது. இங்கு படிக்கும் மாணவ, மாணவிகள் ஏழை குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இந்தப் பள்ளி கட்டிடத்தில் ஒரு பகுதி பராமரிப்பின்றி நவ., 19ம் தேதி காலை இடிந்து விட்டது.

அது வெளியே தெரியாமல் இருக்க ஊராட்சி மன்ற தலைவர் தலைமையில் தூய்மை தினம் நடத்தியது வருந்தத்தக்கது. எனவே, மாணவ, மாணவிகள் நலன் கருதி புதிய கட்டிடம் பள்ளி நடத்த பள்ளி நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.




# 16 கழைக்கூத்தாடி மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா: கள்ளக்குறிச்சி ஆட்சியர் வழங்கல்



கள்ளக்குறிச்சி, நவ.22-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் ஆட்சியர் ஸ்ரவண்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், முதியோர் உதவித்தொகை, வீட்டுமனை பட்டா கோருதல், விதவை உதவித்தொகை, சாலை வசதி, ஆதரவற்றோர் உதவித்தொகை, பாட்டா மாறுதல், தொழில் தொடங்க கடனுதவி கோருதல், ஏரி, குளம் தூர்வாருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பெறப்பட்டன. மனுக்கள் தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள ஆட்சியர் அறிவுறுத்தினார்.

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில், மூளைமுடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 5 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.10,400 மதிப்பில் சிறப்பு சக்கர நாற்காலிகள், உளுந்தூர்பேட்டை வட்டத்திற்குட்பட்ட வெள்ளையூர் கிராமத்தில் வசிக்கும் கழைக்கூத்தாடி மக்களின் 25 ஆண்டுகால கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக 16 கழைக்கூத்தாடி மக்களுக்கு ரூ.9 லட்சத்து 15, ஆயிரத்து 200 மதிப்பிலான, 16 இலவச வீட்டு மனைப் பட்டாக்களை ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சத்தியநாராயணன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் மக்கள் பங்கேற்றனர்.

# மங்களூரு குக்கர் குண்டு வெடிப்பு சம்பவம் எதிரொலி தமிழக–கேரள எல்லையில் போலீசார் தீவிர சோதனை



குமுளி, நவ.22-

கர்நாடக மாநிலம் மங்களூருவில் ஆட்டோவில் குக்கர் குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பு திட்டமிட்ட பயங்கரவாத தாக்குதல் சம்பவம் என்று அந்த மாநில போலீசார் அறிவித்தனர். இதைத் தொடர்ந்து தமிழகத்தில் பாதுகாப்பை பலப்படுத்த டி.ஜி.பி., சைலேந்திரபாபு உத்தரவிட்டார். குறிப்பாக, மாநில எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த அறிவுறுத்தினார்.

கடந்த சில நாட்களுக்கு முன் கோவையில் கார் வெடிப்பு சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், கர்நாடகா குக்கர் குண்டு வெடிப்பு மக்களிடம அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. சபரிமலை ஐயப்பன் கோவில் சீசன் தொடங்கி உள்ள நிலையில், ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் வட மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு தமிழகம் வழியாக செல்வது வழக்கம்.

கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா கட்டுப்பாடு காரணமாக குறைந்தளவே பக்தர்கள் வந்தனர். இதனால் நடைதிறந்த சில நாட்களிலேயே லட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலையில் குவிந்தனர். நேற்றுமுன்தினம் ஞாயிறு விடுமுறை நாள் என்பதால் அதிகமானோர் சபரிமலை வந்திருந்தனர்.

தற்போது குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து குமுளி மற்றும் கம்பம் மெட்டு பகுதியில் சப்-இன்ஸ்பெக்டர் கணேசன், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர்கள் கருப்பையா, ராமசந்திரன் மற்றும் போலீசார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். ஐய்யப்ப பக்தர்கள் வாகனங்கள் உள்பட அனைத்து வாகனங்களுமே தீவிர சோதனைக்கு பின்னரே அனுமதித்தனர்.

கார் மற்றும் வேன் உள்ளிட்ட வாகனங்களில் தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு வரப்படுகிறதா? சந்தேகத்திற்கிடமான நபர்கள் உள்ளனரா? என தமிழக கேரள எல்லையில் பல்வேறு குழுக்களாக போலீஸார் பிரிந்து ஆங்காங்கே தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# ஆப்பிள் கிட்ஸ் மழையர் பள்ளி திறப்பு விழா



சென்னை, நவ.22-

சென்னை திருவொற்றியூர் விம்கோ நகர் சக்திபுரம் பகுதியில் சர்வதேச ஆப்பிள் கிட்ஸ் மழையர் பள்ளி திறப்பு விழாவில் பரீத் முன்னிலை வகித்தார். பள்ளி தாளாளர் சுமதி தலைமை தாங்கினார். இதில் அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் மா.ஃபா பாண்டியராஜன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் குழந்தைகள் அனைவரும் செல்போன் மோகத்தில் மூழ்கிக் கிடப்பதை மாற்றும் வகையில் பள்ளியில் குழந்தைகளின் அறிவுத்திறனையும், செயல் திறனையும் வளர்க்கும் விதத்தில் புதிய வடிவிலான நவீன விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்ட பள்ளியில் அமைச்சர் மா.ஃபா பாண்டியராஜன் விளையாடி துவக்கி வைத்தார்

விழாவில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குப்பன், மாமன்ற உறுப்பினர் கார்த்திக் அஜாக்ஸ் பரமசிவம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# இந்தோனேசியாவில் நிலநடுக்கம் 54 பேர் பரிதாப பலி

# திருமயம் அருகே கல்குவாரி பெண்கள் மறியல்: போலீசார் அராஜகம்





# ஆதிவாசிகள் முன்னேற்றம் பாஜக விரும்பவில்லை: ராகுல்


| சென்னை / புதுக்கோட்டை | 22.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜல்காரிபாய் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1830) (இ.1858)



முலாயம் சிங் யாதவ் , இந்திய அரசியல்வாதி (பி.1939)



வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் , தமிழிசை அறிஞர் (பி.1839) (இ.1898)



மாவன் அத்தப்பத்து , இலங்கைத் துடுப்பாளர் (பி.1970)



## இன்றைய நினைவு நாள்

சிதம்பரநாதன் செட்டியார் , தமிழகத் தமிழறிஞர், மொழியியலாளர் (பி.1907) (இ.1967)



தி. சதாசிவம் , தமிழகப் பத்திரிகையாளர், திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1902) (இ.1997)



பி. கோவிந்த பிள்ளை , இந்திய அரசியல்வாதி (பி.1926) (இ.2012)

